**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**DVC No.16/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Kaviyarasi | Prosecution | PW-1 Cross |
| Father/Husband Name | Agoramurthi | Defence | |
| Village | Mangaimadam | Taluk | Sirkali |
| Calling | Nerunji Kollai Post | Religion | |
| Age | 27 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **19.07.2023** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது எனது அம்மா ஊரான அத்திப்பட்டு ஆலம்பாடியில், ரெட்டியார் தெருவில் குடியிருந்து வருகிறேன் . என் கூட பிறந்தவர் ஒரு அண்ணன் மட்டும் உள்ளார். எனது அண்ணனுக்கு 2020 ல் திருமணம் ஆனது. எனது 29.05.2019 ல் திருமணம் நடந்தது. எனது அண்ணன் 4, 5 வருடங்களாக வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். தற்போது வெளிநாட்டில்தான் வேலை பார்த்து வருகிறார். எனது அண்ணன் மனைவி எனது அம்மா வீட்டிலும், அவரது அம்மா வீட்டிலும் இருப்பார். இப்போது அவரது அம்மா வீட்டில்தான் உள்ளார். நான் எனது கணவரை விட்டு பிரிந்து எனது தாயார் வீட்டிற்கு சென்றபின்புதான் எனது அண்ணன் மனைவியை நான் பிரச்சினை செய்து அவரது தாயார் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. எனது அண்ணனும் அவரது மனைவியும் சேர்ந்து வாழ்வதற்கு நான்தான் இடையூறாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. அண்ணன் மனைவி எனது சொந்தக்காரர்தான். நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது குழந்தைக்காகவும், எனக்காகவும் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காகதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நாகப்பட்டினம் சமூக நலத்துறையில் கொடுக்கப்பட்டுள்ள மனுவில் என்னுடைய கையெழுத்து கேட்டு அதில் நான் சொன்ன விவரத்தைதான் எழுதி உள்ளார்கள் என்றால் சரிதான். நாகப்பட்டினம் சமூக நலத்துறையில் மனுதாக்கல் செய்தபோது எனது குழந்தைக்கு 5 மாத கைக்குழந்தை.

**நாகப்பட்டினம் சமூக நலத்துறையில் தாக்கல் செய்துள்ள மனுவில் சுமார் 1 வருடத்திற்கு முன்பு கணவர் வீட்டில்** உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வன் முறை நடந்ததாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் கணவர் மற்றும் கணவரின் குடும்பத்தினரால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வன் முறை நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவரை பிரிந்து எத்தனை ஆண்டுகளுக்கு பின்னர் நாகப்பட்டினம் சமூக நலத்துறையில் தாக்கல் செய்தேன் என்றால் 1வருடத்திற்கு பின்பு தாக்கல் செய்தேன். எனது கணவரை பிரிந்து எனது அம்மா வீட்டிற்கு வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் தற்போது வரை 2 வருடம் ஆகிறது. கணவருடன் சேர்ந்து வாழ 2 வருடங்களில் ஏதேனும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. 05.7.2022 ம் தேதி நாகப்பட்டினம் சமூக நலத்துறையில் மனு தாக்கல் செய்தேன். எனது கணவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளேன். அது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.7 ஆவணம் என்றால் சரிதான். மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாருக்குதான் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை செய்து மாவட்ட சமூக நலத்துறைக்கு பரிந்துறை செய்தார்கள் என்றாலி் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் கணவரோ, அவரது குடும்பத்தாரோ எந்த தேதியில் எந்த வருடம் என்னிடம் பிரச்சினை செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா் என்றால் சொல்லவில்லை. கணவரோ, அவரது குடும்பத்தாரோ என் வயற்றில் உள்ள குழந்தையை கலைப்பதற்காக ஏதே ஒரு பொடியை தண்ணீரில் கலந்து கொடுத்தார்கள் என்று எந்த தேதி, எந்த வருடம் இந்த சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா் என்றால் சரியல்ல. எனது நாத்தனார் பூரி கட்டையால் எனது முதுகில் அடித்ததாக புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனது நாத்தனார் பூரி கட்டையால் அடித்ததின் காரணமாக எனக்கு காயம் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை எடுத்துகொண்டேனா என்றால் இல்லை. எனது கணவர் முடியை இழுத்து கண்ணத்தில் அரைந்து வயிற்றில் உதைக்க வந்தார் என்று எந்த தேதியில் எந்த வருடம் என்று குறிப்பிட்டு எனது மனுவில் குறிப்பிட்டு சொல்லயுள்ளனோ

என்றால் சொல்லவில்லை. நாத்தனார் ராதா எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பாகவே திருமணம் நடந்தது. எனது நாத்தனாருக்கு நலம்புத்தூரில் திருமணம் நடந்துள்ளது. நாத்தனாரர் திருமணம் முடிந்து அவரது கணவர் வீட்டில்தான் வாழ்து வருகிறார் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு பின்பு எனது கணவர் மாமனார், மாமியார் ஆகியோர் கூட்டு குடும்பமாகதான் வாழ்ந்து வந்தோம். திருமணம் முடிந்தமறுநாளே தனி குடித்தனம் செல்ல கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது சாந்தி முகூர்த்த நாளன்று தனிக்குடித்தனம் வந்தால்தான் நான் இல்லர வாழ்க்கையில் ஈடுபடுவேன் என்று மன நலம் பாதித்தவர் போல் நடந்துகொண்டேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு 1 மாதம் காலம்தான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். அந்த 1 மாதம் காலத்தில்கூடி கணவருடன் இல்லர வாழ்க்கையில் ஈடுபடாமல் வீண் பிரச்சினை செய்துகொண்டு தனிக்குடித்தனம் வந்தால்தான் வாழ்வேன் என்று பிரச்சினை செய்து எனது தாயார் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்திற்காக சீராக செய்தார்கள் என்ற விவரம் கணவருக்கோ, கணவரின் குடும்பத்தாருக்கே தெரியாது என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டில் தான் நகை உள்ளது. நாகரீகம் கருதி எதிர் மனுதாரர்கள் என் வீட்டில் என்ன சீர் வரிசை செய்தார்கள் என்று கேட்க வில்லை என்றால் சரியல்ல. எனக்கு போட்ட நகைகள் அனைத்தையும் எனது அம்மா வீட்டிற்கு செல்லும்போது எடுத்து சென்று விட்டேன் என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு பல லட்சம் செலவு செய்து மருத்துவ சிகிச்சை வழங்கி காப்பாற்றினேன் என்று குறிப்பிட்டு எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நா்ன கொடுத்த புகார்மனுவிலும் எனது கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு 1 மாத காலத்தில் எனது கணவர் குடும்பத்தாருக்கு செய்ய வேண்டிய எந்த பணியையும் செய்யவில்லை என்றாலும், தனி குடித்தனம் போக வேண்டும் என்ற எண்ணத்தில் அனைவரையும் மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு 1 மாதத்தில் எனது கணவர் வெளிநாடு சென்று விட்டார் என்றால் சரிதான். எனது கணவர் வெளிநாடு சென்ற பின்னிட்டு நான் அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவர் வெளிநாடு சென்ற

பின்னிட்டு எனது தாயாா் வீட்டிற்கு சென்று விட்டேன் என்று புகாாில் கூறியுள்ளேனா என்றால் எனது மாமியாா், நாத்தனாா் என்னிடம் சண்டை போட்ட பின்னிட்டு எனது தாயாா் வீட்டிற்கு சென்ற விவரத்தை கூறியுள்ளனே். எனது கணவா் வெளிநாடு சென்ற பின்னிட்டு 1 மாதம் கழித்து எனது அம்மா வீட்டிற்கு சென்றேன். எனது கணவா் இரண்டு வருடம் வெளிநாட்டில் வேலை செய்த காலத்தில் கிடைத்த வருமானத்தை எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் செலவு செய்தாா் என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு திருமணத்திற்காகதான் எனது கணவா் வெளிநாட்டில் இருந்து வந்தாா் என்றால் சரிதான். எனது கணவா் வெளிநா்ட்டிலிருந்து வந்த பின்புதான் எனது கணவா் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. எனது கணவா் வெளிநாட்டில் இருந்தபோது அடிக்கடி எனது கணவா் வீட்டிற்கு சென்று வந்தேன். மேற்படி விவரத்தை புகாா் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவா் வெளிநாட்டிலிருந்து வந்த பின்புதான் இல்லர வாழ்க்கையில் ஈடுபட்டோம் என்றால் சரியல்ல. திருமணத்தின்போதும் அதன் பின்னிட்டும் எனது கணவா் வெளிநாட்டிலிருந்து வந்த பின்பும் இல்லர வாழ்க்கையில் இருந்தோம். அதன் பின்புதான் கா்ப்பமானேன் என்றால் சரிதான். கா்ப்பமான பின்பு 3 மாதம் கழித்து ஜுலை மாதம் 2021ல் எனது தாயாா் வீட்டிற்கு சென்றேன். 2022ல் எனக்கு குழந்தை பிறந்தது. 2021ம் வருடத்திற்கு பின்பு எனது கணவா் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வந்தேன். எனது கணவா் கொராணாவால் பாதிக்கப்பட்டு 20.07.21ம் தேதியன்று தீவிர மருத்துவ சிகிச்சையில் இருந்தாா் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. எனது மாமியாா், 11. 07.21ம் தேதி கொராணாவால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்தாா் என்றால் சரிதான். அந்த விவரம் எனக்கு தொியும். மாமனாா் 19.06.21ம் தேதி கொராணாவால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்தாா் என்றால் சரிதான். மூவருக்கும் கொராணா நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது நானும், எனது குடும்பத்தாரும் அவா்களை எந்த உதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியாா் எனது நாத்தனாா் வீட்டில் இருந்து சிதம்பரம் அம்மா பேட்டையில் சிகிச்சை எடுத்து கொண்டாா். நான் கா்ப்பமாக இருந்ததால் சென்று பாா்க்கவில்லை. மாமனாா் கொா்ள்ளிடம் வெங்கடேஸ்வரா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தாா்.

எனது அப்பா தினந்தோறும் அவருக் குதேவையானவற்றை செய்து கொண்டுபோய் கொடுத்து பாா்தது வந்தாா். எனது மாமனாா், மாமியாருக்கு கொராணா நோய் தொற்றினால் சிகிச்சையிலிருந்தபோது எனது அப்பா சென்று உதவி செய்தாா் என்ற விவரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மனைவி என்ற நிலையில் இருந்து எனது கணவருக்கோ, எனது கணவாின் குடும்பத்தாருக்கோ எந்த உதவியோ செய்யாமல் நியாயமான காரணமின்றி எனது கணவரை பிாிந்து எனது அம்மா வீட்டில் சென்று வாழ்ந்து வருகிறேன் என்றால் கணவா் தான் என்னை கருப்பாக இருப்பதாகவும், அசிங்கமாக பேசி உருவ கேலி செய்து வந்ததால்தான் நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றேன். எனது கணவரும், அவரதுகுடும்பத்தாரும் பல முறை என்னுடன் சோ்ந்து வாழ உறவினா் மற்றும் ஊா் முக்கியஸ்தா்கள் முன்னிலையில் முயற்சிகள் செய்தா்கள் என்றால் சரியல்ல. நாங்கள்தான் ஊா் பஞ்சாயத்து செய்து சோ்ந்து வாழ முயற்சித்தோம். எனது கணவா் எனது குழந்தையை பாா்க்கவரும்போது நான் அசிங்கமாக திட்டி அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. எனது கணவா் என்னுடன் சோ்ந்து வாழ முயற்சித்தபோது நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல.நான் மிரட்டியதால்தான் எனது கணவா் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தாா் என்றால் ச ரியல்ல. எனது கணவா் எனக்கு அனுப்பி வழக்கறிஞா் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றா் சரிதான். நான் சோ்ந்து வாழ வேண்டும் என்றுதான் காவல் கண்காணிப்பாளாிடம் புகாா் கொடுத்தேன். சோ்ந்து வாழ முயற்சி செய்தும் முடியாமல் போனதால் எனது கணவா் மயிலாடுதுறை சாா்பு நீதிமன்றத்தில் HMOP.NO.80/2022 என்ற விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தாா் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் ஆஜராகததால்தான் ஒரு தலை பட்ச உத்தரவு ஏற்பட்டது என்றால் இரத்து செய்ய மனு செய்துள்ளேன். விவகாரத்து மனு 04.04.2022 ம் தேதி தாக்கல் செய்தாா் என்றால் தேதி பற்றிய வவிரம் தொியவில்லை. அறிவிப்பை பெற்றுக்கொண்டேன். எனது கணவா் விவகாரத்து மனு தாக்கல் செய்த பின்னிட்டுதான் நான் இவ்வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது தாயாா் வீட்டில் என் அம்மா எனது அண்ணன் வருமானத்தில் நான் நன்றாக வாழ்கிறேன் என்றால் சரியல்ல..நான் எதிா் மனுதாரருக்கு கொடுத்த மன

உலைச்சல் காரணமாகதான் வெளிநாடு செல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது எனது கணவா் கூலி வேலை செய்து தன்னை பராமாித்து கொள்கிறாா் என்றால் சரியல்ல. ஏ.சி சரிசெய்யும் வேலை செய்கிறாா். எதிா் மனுதாரா் தினமும் 300, 400 ரூபாய்க்கு வருமானத்திற்கு வேலை செய்கிறாா் என்றால் சரியல்ல. நான் எனது கணவருக்கு எதிராக இம்மனுவை தாக்கல் செய்ய எந்தவிதமான முகாந்திரமும் இ்ல்லை என்றால் சரியல்ல. எதிா் மனுதாரரின் தாயா் தகப்பனாா் என்னை அவா்களது மகளை போல் பாதுகாத்து வந்தாா் என்றால் சரியல்ல. நான் தனிக்குடித்தனம் போக வேண்டும் என்ற காரணத்திற்காக எவ்வித நியாயமான காரணமும் இன்றி, கணவா் மற்றும் கணவா் குடும்பத்தாருக்கு எதிராக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருடன் சோ்ந்து வாழ நான் சட்டபடியான நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் சரியல்ல. எதிா் மனுதாராா்கள் எந்தவிதமான குடும்ப வன்முறையிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**